செ.வெ.934/2017

நாள்: 07.12.2017.

**ஒகி புயலால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களில் சேதமடைந்த பகுதிகளை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்**

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒகி புயலால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களில் சேதமடைந்த பகுதிகளை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் அவர்கள் முன்னதாக, அகஸ்தீஸ்வரம் வட்டம், லீபுரம் ஊராட்சியில் விவசாயின் வாழைமர விளைநிலம் ஒகி புயலினால் பாதிக்கப்பட்டுள்ளதை வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை இணைந்து மேற்கொள்ளும் இழப்பீடு குறித்த கணக்கீட்டு பணி, வடக்கு தாமரைகுளம் மற்றும் மகாராஜபுரம் பகுதிகளில் கணக்கீட்டு பணி ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

பின்னர், தோவாளை பகுதிகளிலும், திருப்பதிசாரம் கிராமத்தில் விவசாயின் நெற்பயிர் பாதிக்கப்பட்டுள்ளதை கணக்கெடுக்கும் பணியினை ஆய்வு செய்தார். வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை இணைந்த கணக்கீட்டு குழுவினரிடம், விவசாய பெருமக்களின் சேதமடைந்த விவசாய நிலங்களுக்கு இழப்பீடு குறித்து கணக்கிடுவதைபற்றியும் ஆலோசனை செய்தார். மேலும், விவசாய பெருமக்களிடமிருந்து வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் அவர்கள் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாய பெருமக்களுக்கு இழப்பீடு குறித்து மேற்கொள்ளப்படும் கணக்கீட்டு பணி விரைந்து முடிக்கப்பட்டு, அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்படும் என்று விவசாய பெருமக்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூடுதல் இயக்குநர் (வேளாண்மைத்துறை – சென்னை, தலைமையிடம்) திரு. எம். கனகராஜ், இணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை – சென்னை, தலைமையிடம்) திரு. பி. சிவகுமார், உதவி இயக்குநர் திரு. என்.பாலகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.

Scanned by CamScanner